"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 7

**நேரம்: 120 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

1. **சரியான விடையின் முன் புள்ளடியிடுக.**

1. மக்களின் வாழ்வியல் கோலங்களை வெளிப்படுத்தும் கலையாக அமைவது
   - [ ] கூத்து
   - [ ] தொழில்
   - [ ] விஞ்ஞானம்

2. அறம், பொருள், இன்பம் எனும் முப்பால் பற்றிக் கூறும் நூல்
   - [ ] திருவாசகம்
   - [ ] திருக்குறள்
   - [ ] திருமந்திரம்

3. களனிகள் விளைய உழவர்கள் மகிழ்ந்தனர். இதில் களனி என்பது
   - [ ] தோட்டம்
   - [ ] வயல்
   - [ ] காடு

4. மொழிக்கு முதலில் வரும் எழுத்துத்தொகுதி
   - [ ] க ச த ப
   - [ ] அ ற ச த
   - [ ] ஈ ச ன ம

5. கரப்பு ஆடையும், பாரமுடிகளும் அணிந்து ஆடப்படும் கூத்து
   - [ ] வடமோடி
   - [ ] தென்மோடி
   - [ ] காமன்கூத்து

6. நிலைமொழி இறுதியெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் பொருள் பொருத்தமுறச் சேர்வது
   - [ ] தொடர்மொழி
   - [ ] சொற்புணர்ச்சி
   - [ ] இணைமொழி

7. இன்றைய சூழ்நிலையில் தொழிற்கல்வி இல்லாமல் தொழில் பெறுவது கடினம். இங்கு கடினம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   - [ ] எளிது
   - [ ] விரைவு
   - [ ] வாய்ப்பு

8. காலை வேளையில் பறவைகள் கூட்டங்கூட்டமாகப் பறந்தன. இதில் கூட்டங்கூட்டம் என்பது
   - [ ] அடுக்குமொழி
   - [ ] இரட்டைமொழி
   - [ ] அடுக்கிடுக்குமொழி

9. எனது அப்பம்மாவின் மகனின் பிள்ளை
   - [ ] சிற்றப்பா
   - [ ] மாமா
   - [ ] நான்

10. தொடக்க காலத்தில் திருமணமாகாத ஆண்கள் மட்டுமே ஆடிய ஆட்டம்
    - [ ] கோலாட்டம்
    - [ ] கும்மி
    - [ ] கரகாட்டம்

11. 16 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசை ஆண்ட தமிழ்மன்னன்

☐ பண்டாரவன்னியன் ☐ சங்கிலியன் ☐ எல்லாளன்

12. சக்திமுற்றப்புலவர் தன் மனைவிக்குத் தூதாக அனுப்பிய பறவை

☐ மயில் ☐ அன்னம் ☐ நாரை

13. 'வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி …' இதில் வரை என்பது

☐ மலை ☐ குளம் ☐ பாறை

14. கண்ணை இமை காப்பது போல் அன்னை குழந்தையைக் காப்பாள். இங்கு கண்ணை இமை காப்பது போல என்பது

☐ உவமைத்தொடர் ☐ உம்மைத்தொடர் ☐ வேற்றுமைத்தொடர்

15. மகிழ்ச்சி, வேதனை, அச்சம், வியப்பு போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் வாக்கியம்

☐ விருப்புவாக்கியம் ☐ மெய்ப்பாட்டுவாக்கியம் ☐ ஏவல்வாக்கியம்

16. பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம். இதில் பகைவன் என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ வீரன் ☐ நண்பன் ☐ எதிரி

17. தமிழரின் போர் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழும் நூல்

☐ அகநானூறு ☐ புறநானூறு ☐ நாலடியார்

18. "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்" எனத் திருக்குறளைச் சிறப்பித்துக் கூறியவர்

☐ கொங்கணர் ☐ இடைக்காடர் ☐ திருமூலர்

19. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து வட்டக்குடை பிடித்து வாரார். இவர்

☐ தேள் ☐ நண்டு ☐ ஆமை

20. கண்மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவர்

☐ வள்ளல் ☐ ஊதாரி ☐ உலோபி

(20×1=20 புள்ளி)

**2. சேர்த்தெழுதுக.**

1. பால் + ஆடை = ____________________
2. இரண்டு + உயிர் = ____________________
3. பழைமை + தமிழ் = ____________________
4. பழம் + பாகு = ____________________
5. அச்சு + கலை = ____________________
6. உள் + அரங்கு = ____________________

(6×1=6 புள்ளி)

**3. பிரித்தெழுதுக.**

1. பொன்விழா = ____________ + ____________
2. அறநூல் = ____________ + ____________
3. சான்றிதழ் = ____________ + ____________
4. தென்திசை = ____________ + ____________
5. நல்லறிவு = ____________ + ____________
6. தாயன்பு = ____________ + ____________

(6×1=6 புள்ளி)

**4. பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.**

1. பனிகால விடுமுறையில் மாணவர்கள் பனி ________________ ச் செல்வர்.
(சருக்க, சறுக்க)

2. ஈழத்தின் மலையகத்தில் தேயிலை ________________ வளரும்.
(செழித்து, செளித்து)

3. ________________ என்பது காய்கறிகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி உப்பிட்டு உலர்த்தும் முறையாகும். (வத்தல், வற்றல்)

4. நமக்குள்ளே ________________ கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை.
(பளங், பழங்)

5. விருந்தோம்பல் தமிழர்களின் ________________ பண்பாடுகளுள் ஒன்றாகும்.
(பாறம்பறி, பாரம்பரிய)

(5×1=5 புள்ளி)

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 13 – 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசின் தலைநகராக விளங்கியது எது? 1 புள்ளி

2. கட்டுரை வகைகள் மூன்று தருக. 1 புள்ளி

3. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்...' எனப் பாடியவர் யார்? 1 புள்ளி

4. உடன்பாடு, எதிர்மறை வினைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. 2 புள்ளி

5. கலை விழாக்களை நடத்தும் அமைப்புகள் எவை? 1 புள்ளி

6. சொற்றொடர் என்றால் என்ன? பெயரெச்சச்சொற்றொடர், வினையெச்சச்சொற்றொடர் என்பவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக. 1½ புள்ளி

7. பெயர்ச்சொல்லின் சிறப்பியல்பு யாது? ½ புள்ளி

8. வகரவரிசை – 8 எழுத்துகளுக்கும் சொற்கள் உருவாக்குக. 2 புள்ளி

6. **கீழ்க்காணும் திருக்குறள்களை எழுதுக.**

1. உடுக்கை இழந்தவன் ______________________

   ______________________

2. கனவிலும் இன்னாது ______________________

   ______________________

(2×2= 4 புள்ளி)

7. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

அமுத மூறும் அன்பு கொண்டு அரசு செய்த நாட்டிலே
அடிமையென்று பிறர்ந கைக்க முடிவ ணங்கி நிற்பதோ!
இமயம் தொட்டுக் குமரி மட்டும் இசை பரந்த மக்கள் நாம்
இனியும் அந்தப் பெருமை கொள்ள ஏற்ற யாவும் செய்குவோம்.

குஞ்சைக் காக்கும் கோழி போலக் காத்த மன்னர்கள்
கோல் நடத்த அச்சமின்றி மேல்நி னைப்புக் கொண்டு நாம்
பஞ்சபூத தத்து வங்கள் பக்தியோடு முத்தியைப்
பார் சிறக்கச் சொன்ன நாமும் சீர்கு றைந்து போவதோ.

1. மன்னர்கள் எவ்வாறு மக்களைக் காத்தார்கள்?

   ______________________

2. பஞ்சபூதங்கள் எவை?

   ______________________

3. இப்பாடலில் குறிப்பிடப்பெறும் மலை எது?

   ______________________

4. நாட்டிலே எத்தகைய அரசு நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது?

   ______________________

5. இப்பாடலைப் படிக்கும்போது உமக்கு ஏற்படும் உணர்வு யாது?

   ______________________

6. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

   அ. இடப்பெயர் ______________



(6×1= 6 புள்ளி)

ஆ. குணப்பெயர் ______________________

**8. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. ஓய்வுநேரப் பயன்பாடு
2. வாய்மொழி இலக்கியம்
3. நீர் சென்ற கல்விச்சுற்றுலா

8 புள்ளி

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி கருத்து நிறைந்த பந்தியாக எழுதுக.**

1. அவனுக்கு இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன் என்னும் நான்கு புதல்வர்கள் இருந்தார்கள்.
2. தசரதமன்னன் அயோத்தியில் இருந்து ஆட்சி புரிந்தான்.
3. இராமன் மீது வெறுப்புக் கொண்டிருந்த கூனி இதனை நிறுத்தத் திட்டமிட்டாள்.
4. தசரதன் தான் முதுமை அடைந்ததால் இராமனுக்கு முடிசூட்ட எண்ணினான்.
5. வஞ்சகத்தினால் கூனி கைகேயியின் மனதை மாற்றி இராமன் முடிசூடுவதைத் தடுத்து நிறுத்தினாள்.
6. இராமன் எல்லோரிலும் மூத்தவன்.
7. அரசனுடைய முடிவை மந்திரி பிரதானிகளும் நாட்டுமக்களும் ஏற்றுக்கொண்டனர்.

(7 புள்ளி)

**2. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த பிறமொழியில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. பெரியோரை மதித்து நடப்போம்.

2. நாம் நூலகத்திற்குச் சென்று படிப்போம்.

3. செம்மொழிகளுள் தமிழும் ஒன்று.

4. நாம் பள்ளியில் நாடகம் நடித்தோம்.

______________________________________________

5. அங்காடியில் பொருட்களை வாங்குவோம்.

______________________________________________

6. நன்றி மறவாது வாழவேண்டும்.

______________________________________________

(6×½=3 புள்ளி)

**3. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகத்தின் வேளாண்மை, முதன் முதலில் பெண்களால் தொடங்கிவைக்கப்பட்டது. வேட்டைக்காலத்திலும் கால்நடை மேய்ச்சல் காலத்திலும், ஆடவர்கள் தம்மை விட்டுப்பிரிந்திருந்து நீண்டகாலம் ஒரே இடத்தில் தங்கியிருந்த காலங்களிலும் பெண்டிர் தம் இடத்தைச் சுற்றி நிலத்தைப் பதப்படுத்தித் தானியங்களைப் பயிராக்கினர். எனவே, பெண்டிரே முதல் வேளாண்மை உழைப்பாளியாவார். இன்றும் ஆபிரிக்காவில் வேளாண்மை செய்யும் முதல் பொறுப்பு பெண்டிரின் கையகத்தே உள்ளது. ஆனால் காலப்போக்கில் வேளாண்மையில் மாடுகளின் பங்கும் ஏர் கலப்பை போன்ற கருவிகளின் பங்கும் வந்துற்றபோது மாடுகளின் தேவையாலும், கடின உழைப்பின் தேவையாலும் வேளாண்மையிலும் ஆடவர் பங்கு பெறலாயினர். முடிவில் அவரே முதல் இடம் பெறவும் நேர்ந்தது.

1. உலகில் வேளாண்மையைத் தொடக்கியவர்கள் யார்?

______________________________________________

2. பெண்கள் வேளாண்மை செய்யத் தொடங்கியதற்கான காரணம் என்ன?

______________________________________________

3. எங்கு இன்றும் வேளாண்மை பெண்களின் கையிலுள்ளது?

______________________________________________

4. வேளாண்மையில் எக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன?

______________________________________________

5. வேளாண்மைக்கு உதவிய விலங்கு எது?

______________________________________________

(5×1=5 புள்ளி)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |